


புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2048 ஆகஸ்டு 03, 2017 புரட்சி 16 முழக்கம் 29 விலை: ரூ.3.00


ஏன் இந்த பரப்புரைப் பயணம்?

## மூடப்படுகிறது ‘செம்மொழி ஆய்வு நிறுவனம்’

தமிழ் செம்மொழியாக ஏற்கப்பட்ட பிறகு ‘செம்மொழி தமிழ் ஆய்வு மய்யம்’ சென்னையில் அமைக்கப்பட்டது. தனித்து இயங்கிய இந்த ஆய்வு மய்யத்தை இழுத்து மூடிவிட்டு, திருவாரூரில் உள்ள மத்திய பல்கலைக்கழகத்தில் ஒரு துறையாக மாற்ற மோடி ஆட்சி முடிவெடுத்திருக்கிறது. சமஸ்கிருதம், இந்தி மொழியைத் தவிர்த்து பிறமொழி நிறுவனங்கள் அனைத்தையும் ஆங்காங்கே இருக்கும் மத்திய பல்கலைக்கழகங்களில் ஒரு துறையாக இணைக்க மோடியின் மனித வள மேம்பாட்டுத் துறை முடிவெடுத்திருக்கிறது. இந்தி, சமஸ்கிருதம் தவிர ஏனைய மொழிகளை ஒரு இனத்தின் பண்பாட்டு அடையாளங்கள் என்பதை மோடி ஆட்சி ஏற்கத் தயாராக இல்லை. தேசிய இனங்களை இந்த பார்ப்பனிய கட்டமைப்புக்குள் கொண்டு வந்து, தேசிய இனங்களின் மொழிகளை சமஸ்கிருத, இந்தி ஆளுகைக்குக் கீழே அடக்க முயலும் பார்ப்பன சதியை தமிழர்களே! தமிழ் மொழிப் பற்றாளர்களே புரிந்து கொள்ளுங்கள்!

## கீழடியில் நடக்கும் கீழறுப்பு

சிவகங்கை அருக உள்ள கீழடியில் தமிழர் சங்ககால வாழ்வியல் குறித்து சான்றாதாரங்களை தொல்பொருள் ஆராய்ச்சித் துறை கண்டறிந்திருக்கிறது. ஜாதி, மதங்கள் இல்லாத ஒரு வாழ்வே சங்ககாலத் தமிழர்கள் வாழ்வு என்று இந்தத் தடயங்கள் உறுதி செய்வதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இந்துத்துவா திணிப்புக்கு இது எதிரானது என்பதால் தொல்பொருள் தடயங்களை ஒரு மூட்டையில் கட்டி பெங்களூருவில் உள்ள தலைமையகத்தில் வீசி விட்டனர். நீதிமன்ற வழக்குகள், பொது மக்கள் எதிர்ப்பு வந்த பிறகு மீண்டும் ஆய்வுகள் தொடங்கின. நேர்மையான ஒரு அதிகாரி முறையாக தொல்பொருள் ஆய்வுகளைத் தொடங்கினார். அவரை திடீரென்று இடமாற்றம் செய்தது மோடி ஆட்சி. மக்கள் கொதித்தெழுந்தார்கள். கீழடியைப் பார்வையிட வந்த மத்திய அமைச்சர் பொன் இராதாகிருட்டிணன், நிர்மலா சீத்தாராமனை முற்றுகையிட்டார்கள். தமிழர்கள் பண்பாடு பார்ப்பனிய இந்துத்துவா பண்பாடு அல்ல என்பதை உறுதிப்படுத்தும் ஆய்வுகளை முடக்க முயலுகிறது மோடி ஆட்சி.

## அடிபணியும் தமிழக அரசு

கதிராமங்கலத்தில் போராடும் மக்களுக்காக களமிறங்கிய பேராசிரியர் ஜெயராமன் உள்ளிட்ட 10 தோழர்களை கைதுசெய்து சிறையிலடைத்திருக்கிறது தமிழக அரசு. அவர்களை பிணையில் விடுவிக்கவும் கூடாது என்று ‘ஓ.என்.ஜி.சி.’ பார்ப்பன அதிகாரவர்க்கம் தனது முழு அதிகாரச் செல்வாக்கையும் பயன்படுத்துகிறது.

நெடுவாசல் – கதிராமங்கலத்தில் போராடும் மக்களுக்காக அவர்கள் கோரிக்கையின் நியாயங்களை விளக்கி சேலத்தில் அரசு மகளிர் கல்லூரி அருகே துண்டறிக்கை வழங்கிய மாணவி வளர்மதியை காவல்துறை ஜுலை 16ஆம் தேதி கைது செய்து குண்டர் சட்டத்தை ஏவியிருக்கிறது. 23 வயது வளர்மதி, அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் வேளாண் பட்டம் பெற்றவர். சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் முதலாண்டு இதழியல் படிக்கிறார். ‘ஓ.என்.ஜி.சி.’யை எதிர்ப்போர் எல்லோருமே தேச விரோதிகளாம். மத்திய அரசிடம், ‘ஓ.என்.ஜி.சி.’க்கு அவ்வளவு செல்வாக்கு! தமிழக அரசுக்கு மத்திய அரசிடம் அவ்வளவு குலை நடுக்கம்! தமிழ் மக்கள் உரிமைக்குக் குரல் கொடுப்பவர்கள் தேச விரோதிகளா?

## பறி போகிறது திருச்சி துப்பாக்கி தொழிற்சாலை

1966ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் திருச்சியில் தொடங்கப் பட்டது துப்பாக்கித் தொழிற்சாலை, பொதுத் துறை நிறுவனம். இந்திரா காந்தி திறந்து வைத்தார். இந்திய இராணுவத்துக்குத் தேவையான தளவாட உற்பத்தியில் முதலிடத்தில் நிற்கும் இந்த நிறுவனத்தை தனியார் மயமாக்கப் போகிறது, மோடி ஆட்சி. நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட பொதுத் துறை நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு விற்பதன் மூலம் 72,500 கோடி நிதி திரட்டு வதற்கான தீவிர முயற்சிகளில் இறங்கியிருக்கிறது மோடி ஆட்சி. இதில் பணியாற்றும் தொழிலாளர்கள் மற்றும் இந்தத் தொழிற் சாலையைச் சார்ந்து வாழும் அய்ந்து கிராமங்களைச் சார்ந்த மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகிவிட்டது. ‘மேக் இன் இந்தியா’ மூலம் பன்னாட்டு நிறுவனங்களுக்கு சிவப்புக் கம்பளம் விரிக்கும் மோடி ஆட்சி, பாதுகாப்பு தொடர்பான அனைத்து துறைகளையும் செயலிழக்கச் செய்கிறது. யூத மத வெறி இஸ்ரேலிடம் அதிகமான இராணுவத் தளவாடங்கள் வாங்கப்படுகின்றன.

பார்ப்பனியமும் ஜியோனிசமும் இராணுவ ஒப்பந்தம் செய்து கொள்ளும் நிலை வந்துவிட்டது. தமிழர்களே என்ன செய்யப் போகிறீர்கள்?

# தமிழக மருத்துவ சேவையை முடக்கும் ‘நீட்’

ஏன் இந்த பரப்புரைப் பயணம்?

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படை நாம் உருவாக்கிய கல்வி அமைப்பு. அந்த அமைப்பை நாம் பார்ப்பன ஆதிக்கத்தி லிருந்து பறித்து, அனைத்து ஒடுக்கப்பட்ட சமூகத்தினருக்கும் பகிர்ந்தளித்தோம். பிரிட்டிஷ்காரரர் நாட்டை ஆண்டபோது பிரிட்டிஷார் வழங்கிய நமக்கான சொற்ப அதிகாரங்களோடு மாகாண சபையை நமது முன்னோர்களான நீதிக் கட்சியினர் வழியாக ஆட்சி செய்தோம். 1928ஆம் ஆண்டிலேயே நாம் இந்த கல்வி வேலைவாய்ப்புகளை அனைத்து மக்களுக்கும் பகிர்ந்தளிக்கும் இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்தோம். “சுதந்திர”த்துக்குப் பிறகு காமராசர் ஆட்சி யில் சமூகநீதி இலவசக் கல்வி மடை திறந்த வெள்ளம்போல் பரவியது. தொடர்ந்து அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர். ஆட்சி யிலும் நாம் நமக்கான இடஒதுக்கீடு என்ற சமூக நீதிக் கொள்கையைக் கொண்டே முன்னேறினோம். அதனால்தான் மண்டல் பரிந்துரையை அமுலாக்கி, மத்திய அரசுப் பணிகளில் 27 சதவீத பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டைக் கொண்டு வந்து, அதன் காரணமாகவே பிரதமர் பதவியை இழந்த மாமனிதர் வி.பி.சிங், “சமூக நீதிக்கான தலைநகரம் இந்தியாவில் தமிழ்நாடுதான்” பெருமையோடு என்று கூறினார். இன்று அமுலில் உள்ள வன்கொடுமை தடுப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தவரும் வி.பி.சிங்தான்.

மருத்துவத் துறையில் இந்தியாவுக்கே வழி காட்டும் மாநிலம் தமிழ்நாடு. தமிழ் நாட்டைப்போல் மிகச் சிறந்த மருத்துவர்கள் வேறு மாநிலத்தில் இல்லை. ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் பிறந்து, முதல், இரண்டாம் தலைமுறையாக இடஒதுக்கீட் டில் இடம் கிடைத்து படித்த நமது மருத்துவர்கள் மருத்துவத் துறையில் ஆற்றல் மிகுந்த நிபுணர்கள். இதய அறுவை சிகிச்சையி லிருந்து உறுப்பு மாற்று சிகிச்சை வரை இந்தியாவின் தலைசிறந்த மருத்துவர்களை நாம் பெற்றிருக்கிறோம். அது நமது தமிழ் நாட்டின் பெருமை. இப்போது அந்தத் தனித் தன்மையை ஒழிக்க வந்திருப்பதே ‘நீட்’ தேர்வு.

- 2006ஆம் ஆண்டிலேயே நாம் நுழைவுத் தேர்வை ஒழித்து விட்டோம். அது நமது கிராமப்புற மாணவர்களுக்கு பெரும் தடை என்பதை உணர்ந்தோம்.
- ‘ப்ளஸ் டூ’ வரை கடுமையாக உழைத்து மதிப்பெண்களைப் பெறும் நமது பிள்ளைகள், நல்ல மதிப்பெண் பெற்று மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கப் போகிறது என்ற நம்பிக்கையுடன் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி இருந்தபோது ‘நீட்’ தேர்வு எனும் பேரிடியை மத்திய மோடி ஆட்சி நம் மீது திணித்தது. “ப்ளஸ் டூ மதிப்பெண்களை குப்பையில் போடு; நாங்கள் ஒரு தகுதித் தேர்வு நடத்துவோம்; இதில் தேர்ச்சிப் பெற்றால்தான் மருத்துவக் கல்லூரிக்கு போகலாம்” என்கிறது மத்திய மோடி ஆட்சி.

  சி.பி.எஸ்.ஈ. என்ற மத்திய அரசு பாடத் திட்டத்தில் நடத்தப்படுவது இந்தத் தேர்வு, அந்தப் பாடத் திட்டத்தில் படிப்பவர்கள் தமிழ்நாட்டில் 15 சதவீதம் பேர். அதுவும் பார்ப்பனர், பணக்காரர், உயர்சாதி, மேட்டுக்குடி வர்க்கத்தினர். 85 சதவீதம் நமது மாநில அரசு பாடத் திட்டத்தின் கீழ் படிக்கும் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் மாணவர்கள், நமது மாணவர்கள் ‘நீட்’ தேர்வு முறைக்கு பழக்கப்படா தவர்கள். எனவே ப்ளஸ் டூ தேர்வில் மதிப்பெண் பெற்றும் நீட் தேர்வில் தேர்ச்சிப் பெற முடியவில்லை.
- 2016 மார்ச்சில் தமிழகத்தில் 12ஆம் வகுப்புக்கான பொதுத் தேர்வில் நமது மாநில பாடத் திட்டத்தின் கீழ் தேர்வு எழுதிய மாணவர் 8,33,682. மத்திய பாடத் திட்டமான சி.பி.எஸ்.ஈ.யின் கீழ்த் தேர்வு எழுதியோர் 13,265. தமிழகத்தில் 2 சதவீதம் கூட மத்திய பாடத் திட்டத்தின் கீழ் தேர்வு எழுதவில்லை. ஆனால், நீட் தேர்வினால் மாநில பாடத் திட்டத்தில் படித்த 98 சதவீத மாணவர்கள் கல்வி மறுக்கப்படும் அபாயம் உள்ளது.
- தமிழ்நாட்டில் 24 அரசு மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. இந்தியாவிலே இங்குதான் அதிக மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. ப்ளஸ் டூ தேர்வு மதிப்பெண் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் நமது தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவ மாணவிகளின், ஓர் ஆண்டுக்கு கல்வி கட்டணம் ரூ.20,000 தான். ஆனால் ‘நீட்’ தேர்வு எழுத ஒவ்வொரு மாணவரும் தனிப் பயிற்சி மய்யத்துக்கு செல்ல வேண்டும். அங்கு ரூ.50 ஆயிரம், ஒரு இலட்சம் என்று கட்டணம். கிராமப்புற மாணவர்களுக்கு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இது எவ்வளவு பெரிய சுமை? ‘பிளஸ் டூ’ தேர்வுக்காக இரவு பகல் பாராமல் படித்து முடித்த களைப்பு நீங்கும் முன்பே நீட் தேர்வுக்கு பயிற்சி என்றால், அவர்களுக்கு எவ்வளவு மன அழுத்தம்?
- தமிழ்நாட்டில் எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்புகளுக்கான இடங்களில் 15 சதவீத இடங்களையும் மேல்பட்டப் படிப்பான எம்.டி., எம்.எஸ். போன்ற படிப்பு களுக்கான இடங்களில் 50 சதவீத இடங்களையும் மத்திய அரசு கோட்டா என்ற பெயரில் இடங்களைப் பறித்துக் கொள்கிறது. மேல் பட்டப்படிப்புக்கு மேலே படிக்கும் உயர் சிறப்புப் படிப்பு களும் உண்டு. டி.எம்., எம்.சி.ஏ.எச். போன்ற இத்தகைய உயர் சிறப்புப் படிப்புக்கான இடங்கள் இந்தியா விலேயே நமது தமிழ்நாட்டில்தான் மிக அதிகம். (192 இடங்கள்) மற்ற மாநிலங் களில் ஒற்றைப் படை எண்ணிக்கையில் தான் இருக்கிறது. இந்த இடங்கள் அனைத்தையும் ‘பகிரங்கப் போட்டி’க்கு உள்ளாக்கி பிற மாநிலத்துக்காரரர்களை நம்முடைய அரசு செலவின் கீழ் படிக்க கதவு திறந்துவிட்டு விட்டார்கள். உதாரணமாக சென்னை எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனையில் உயர் சிறப்புக்கான மருத்துவப் படிப்புக்கான இடங்கள் 8இல் 6 இடங்களை வட மாநிலத்தவர் பிடித்துக் கொண்டுள்ளனர். கல்லீரல் மருத்துவத்துக்கு அதி உயர் மருத்துவப் படிப்புக்கான இடங்கள் இரண்டு. இரண்டுமே நமது மக்களுக்குக் கிடைக்கவில்லை. பிற மாநிலத்தவருக்கு போய் விட்டது. நமது செலவில் நாம் உருவாக்கிய மருத்துவக் கல்லூரிக்கான இடங்கள் நமது மாணவர்களுக்கு கிடைக்காமல் ‘அகில இந்திய கோட்டா’ என்று வெளி மாநிலத்துக்காரரர்கள் தட்டிப் பறித்துக் கொண்டு போய் விடுகிறார்கள். எனவேதான் அகில இந்திய கோட்டாக்களே வேண்டாம்; எங்கள் மாநிலத்தில் நாங்கள் உருவாக்கும் மருத்துவக் கல்லூரிக்கான இடங்களில் எங்கள் மாணவர்கள் படிக்க வேண்டும்; அவர்கள் சேவை எங்கள் தமிழ் நாட்டுக்கே வேண்டும் என்று குரல் கொடுக்கிறோம்.

(4ஆம் பக்கம்)

ஏன் இந்த பரப்புரைப் பயணம்?

# தமிழ்நாட்டை இந்தி மாநிலமாக்கத் துடிக்கிறது மோடி ஆட்சி

மோடியின் பா.ஜ.க. ஒவ்வொரு நாளும் திணித்து வரும் இந்தி - இந்துத்துவா எதிர்ப்பை, தமிழ்நாடு, கருநாடகம், கேரள மாநிலங்கள் கடுமையாக எதிர்க்கத் தொடங்கிவிட்டன. தமிழ் நாட்டில் அ.இ.அ.தி.மு.க. குழுக்கள் பா.ஜ.க.விடம் அடங்கிப் போய் சரணாகதி நிலையில் இருந்தாலும் தமிழ்நாட்டு மக்கள் கொந்தளிக்கின்றனர். மாட்டிறைச்சி விற்பனைக்கு கட்டுப்பாடுகள் விதிக்கும் மோடி ஆட்சியின் சட்டத்தை புறந்தள்ளிய கேரள அரசு, அந்த சட்டத்தை நீக்கி மாநிலத்துக்கு தனி சட்டத்தை நிறைவேற்றிவிட்டது. வீடுதோறும் மக்களை சந்தித்து இந்த சடங்கு கலாச்சாரங்களை வலியுறுத்தும் ஆர்.எஸ்.எஸ். ‘குடும்ப பிரபோதன்’ திட்டத்துக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த முதல்வர் பிரணாய் விஜயன், இது மனுதர்ம திட்டம் என்று அறிவித்தார். மீண்டும் ‘திராவிட நாடு கோரிக்கை எழும்’ என்று கேரளாவில் சமூக வலைதளங்களில் எழுதத் தொடங்கிவிட்டார்கள்.

இப்போது கருநாடக முதல்வர் சித்தராமய்யாவும் இந்திக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியிருக்கிறார். கருநாடக அரசு மும்மொழித் திட்டத்தை ஏற்காது. கன்னடம் - ஆங்கிலம் என்ற இரு மொழிக் கொள்கைத் திட்டத்தைத் தான் ஏற்கும் என்று மத்திய அரசுக்கு கடிதம் எழுதி விட்டார். பெங்களூருவில் மாநகர தொடர் வண்டி சேவை சில மாதங்களுக்கு முன் தொடங்கியது. இதற்கான தொடர் வண்டி நிலையங்களில் இந்தி, கன்னடம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் பெயர்ப் பலகைகள் வைக்கப்பட்டிருந்தன. கன்னடர்களுக்கு இந்தி வேண்டாம் என்று சில கன்னட அமைப்புகள் பெயர்ப் பலகையில் இந்தி அழிப்புப் போராட்டங்களை நடத்தி வருகின்றன. 1952ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் தேதி இதேபோல் தமிழ்நாட்டு தொடர் வண்டி நிலையங்களில் இந்தி எழுத்துகளை தார்பூசி அழிக்கும் போராட்டத்தை பெரியார் அறிவித்தார். 600 தொடர்வண்டி நிலையங்களில் இந்தி எழுத்துகள் அழிக்கப்பட்டன. திருச்சி தொடர் வண்டி நிலையத்தில் பெரியார் இந்தியை தார்பூசி அழித்தார். அதே நாளில் தி.மு.க.வும் இதே போராட்டத்தை நடத்தியது. அப்போது ‘தமிழ்த் தேசியர்கள்’ சிலர் தலைமீது தூக்கி வைத்துக் கொண்டாடும் ம.பொ.சிவஞானம், இந்தியை ஆதரித்து பெரியார் இயக்கம் தார்பூசிய பெயர்ப் பலகையில் கெரசினை எடுத்துப்போய் தனது தொண்டர்களுடன் சென்று தாரை அழித்து மீண்டும் இந்தி எழுத்துகளைப் பளிச்சிட வைத்தார். பெரியார் இயக்கம் நடத்திய இந்தப் போராட்டத்துக்குப் பிறகுதான் தமிழக இரயில் நிலையங்களில் தமிழில் பெயர் எழுதுவது முதலிடம் பிடித்தது.

இப்போது பெங்களூரில் தொடங்கப்பட்ட மாநகரத் தொடர் வண்டி சேவை மாநில அரசின் நிர்வாகத்தின் கீழ் ‘பெங்களூரு பெருநகர தொடர்வண்டி வாரியம்’ என்ற அமைப்பின் கீழ் இயங்குகிறது. இதன் தலைவர் மாநில முதல்வர் சித்தராமய்யா. இந்த தொடர்வண்டி சேவைத் திட்டத்துக்கு மாநில அரசு 50 சதவீதமும், மத்திய பா.ஜ.க. ஆட்சி 50 சதவீதமும் முதலீடு செய்துள்ளன. இந்த முதலீட்டு வாய்பைப் பயன்படுத்தி பெயர்ப் பலகைகளை இந்தியிலும் எழுத வேண்டும் என்று மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சராக இருக்கும் நரேந்திரசிங் தோமர் என்பவர் இந்தியிலும் எழுத உத்தரவிட்டார்.

கன்னடர்கள் இந்தி எழுத்துகளை அழிக்கும் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வரும் நிலையில் மாநில முதல்வர் சித்தராமய்யா தலையிட்டு இந்தி எழுத்துக்களை அழித்து விடுமாறு வாரியத்துக்கு அதன் தலைவர் என்ற முறையில் உத்தரவிட்டதோடு மத்திய பெருநகர வளர்ச்சித் துறை அமைச்சருக்கும் இந்தியை ஏற்க முடியாது என்று கடிதம் எழுதி இரு மொழிக் கொள்கையே எங்கள் கொள்கை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். “மத்திய அரசு 50 சதவீத முதலீடு செய்திருந்தாலும், மாநில அரசின் நிதி பங்களிப்பு கூடுதலானது. திட்டத்துக்கான முழுமையான பாதுகாப்பையும் மாநில அரசே வழங்குகிறது. இதற்காக நிதி நிறுவனங்களிடமிருந்து இத் திட்டத்துக்கு பெறப்பட்ட கடன் தொகையை திருப்பி அளிக்கப் போவதும் மாநில அரசுதான். இந்த சேவையில் இழப்பு ஏற்பட்டால் அதைத் தாங்கப் போவதும் மாநில அரசுதான். எனவே, இத் திட்டத்தில் இந்தியைத் திணிக்கும் தங்கள் முடிவை மறு பரிசீலனை செய்தாக வேண்டும். எங்கள் நாட்டில் மக்களும் அறிஞர்களும் கலை இலக்கியவாதிகளும் மும்மொழித் திட்டத்தை எதிர்க்கிறார்கள். இந்தி எங்கள் பண்பாட்டுக்கு எதிரானது என்று கருதுகிறார்கள். ‘இந்தி’யில் எழுதினால் அது எங்கள் மக்களுக்கும் புரியாது, எங்கள் மக்களின் கலாச்சார மொழி உணர்வுகளை மதிக்க வேண்டியது எங்கள் கடமை” என்று கருநாடக முதல்வர் தனது கடிதத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் 1967ஆம் ஆண்டே அண்ணா முதலமைச்சராக இருந்தபோது இருமொழித் திட்டமே தமிழக அரசின் மொழிக் கொள்கை என்று அறிவித்து விட்டார். இந்தியாவின் ஆட்சி மொழி என்று அரசியல் சட்டம் அறிவித்துள்ள இந்தியை இந்தியாவின் இறையாண்மைக்குள் தமிழ்நாடு இருந்தாலும் இந்தியை ஏற்காது என்று அறிவித்து விட்டது. விருப்பமுள்ளவர்கள் இந்தி மொழி உள்பட எந்த மொழியையும் படிக்கலாம்; அது தனிப்பட்ட உரிமை.

இந்தி பேசும் மாநிலங்களை பெரும்பான்மையாகக் கொண்டு இந்திய ஆட்சி நடக்கிறது என்பதற்காக தமிழ்நாடு வேற்று மொழிக்கு ஒருபோதும் அடிமைப் பத்திரம் எழுதித் தர முடியாது என்பதே 1967ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு பின்பற்றி வரும் உறுதியான மொழிக் கொள்கை.

- இந்தியோடு - இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமும் நீடிக்கும் என்று அரசியல் நிர்ணய சபையில் உறுதி தரப்பட்டது.
- இந்தி மட்டுமே இந்தியாவின் ஆட்சி மொழி என்ற கொள்கை குறித்து அரசியல் நிர்ணய சபையில் 1949 ஆகஸ்ட் 22, 23, 24 தேதிகளில் கடுமையான விவாதங்கள் நடந்தன. தமிழ்நாட்டைச் சார்ந்த டி.டி.கிருஷ்ணமாச்சாரி போன்ற பார்ப்பனர்களே கூட. இந்தி ஆட்சி மொழியானால் திராவிட நாடு தனியாகப் பிரிந்து விடும். அதற்கான இயக்கம் தமிழகத்தில் உயிர்த் துடிப்புடன் இருக்கிறது என்று பெரியாரை முன் வைத்துத்தான் இந்தி ஆட்சி மொழியாவதை எதிர்த்துப் பேசினார்.
- இந்தியே ஆட்சி மொழி என்ற கருத்துக்கு ஆதரவாக 74 ஓட்டுகளும் எதிர்த்து 74 ஓட்டுகளும் சமமாக வீழ்ந்தன. அரசமைப்புச் சபைத் தலைவர் இராஜேந்திர பிரசாத் என்ற இந்தி வெறியர் (இவர் காயஸ்தா என்ற உயர்ஜாதிக்காரர் - இந்துத்துவ வெறியர்). தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள ‘இரண்டாவது வாக்களிப்பு உரிமை’ என்ற சிறப்பு உரிமையான, தனது சிறப்பு ஓட்டுரிமையைப் பயன்படுத்தி ஒரு வாக்கு வித்தியாசத்தில் இந்தியை ஆட்சி மொழியாக்கினார். பிறகு இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமும் நீடிக்கும் என்ற திருத்தம் கொண்டு வரப்பட்டது.
- தமிழ்நாட்டில் 1938, 1948, 1965, 1986ஆம் ஆண்டுகளில் இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் வெடித்தன.
- இந்தியோடு ஆங்கிலமும் நீடிக்கும் என்று 1968இல் சட்டப்பூர்வமாக திருத்தம் கொண்டு வரப் பட்டது.
- ஆனால், தமிழ்நாட்டில் ஆங்கிலம், தமிழ் என்ற இருமொழித் திட்டம் இருந்ததால் தமிழ் நாட்டுக்கு இந்தி ஆட்சி மொழி என்ற சட்டம் பொருந்தாது என்று இந்திய அரசு அதிகாரபூர்வமாகவே - ஒவ்வொரு ஆணையிலும் அறிவித்தது. 2007 ஆம் ஆண்டு ஓசையில்லாமல் இந்த விதிவிலக்கை நீக்கினார்கள்.

### இப்போது மோடி ஆட்சி என்ன செய்கிறது?

- இந்தியா முழுமையும் ஒரே நாடு; அது இந்து நாடு.
- இந்தியா முழுமைக்கும் ஒரே பண்பாடு; அது பாரதப் பண்பாடு; அந்தப் பண்பாட்டின் தாய் சமஸ்கிருதம்.
- இந்தியா முழுதும் பசுவை தெய்வமாகப் போற்ற வேண்டும். அதனால் மாட்டிறைச்சி சாப்பிடுவது குற்றம். மாட்டிறைச்சியை வைத்திருந்தாலே கொலை செய்வோம் என்று பசுமாட்டுக் கண்காணிப்பாளர்கள் சட்டங்களைத் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டு கொலை வெறியாட்டம் நடத்துகிறார்கள்.
- தமிழ்நாட்டு மைல் கற்களில் இந்தி எழுத்து; லாரி ஓட்டுனர்களுக்கு எப்படி இந்தி தெரியும் ?
- தமிழ்நாட்டின் மத்திய அ ரசு அலுவலகங்களில் வேலை செய்யும் தமிழ்நாட்டு அரசு ஊழியர்கள் இந்தி படித்தால்தான் பதவி உயர்வு; இந்தி படிக்க தனிப் பயிற்சி.
- தமிழ்நாட்டு சி.பி.எஸ்.ஈ. பள்ளிகளில் இந்தி கட்டாயப் பாடம்.
- தமிழ்நாட்டு தொடர்வண்டி நிலையங்களில் இந்தியில் தான் அறிவிப்பு. இது யாருக்குப் புரியும் ?
- தமிழ்நாட்டின் அரசு வானொலியில் இந்தி செய்தி; இந்திக்காகவே தமிழ்நாட்டில் தனி ‘எஃஎம்’ (F.M.) அலை வரிசை; தமிழ் ‘எஃஎம்’ அலைவரிசை நிகழ்ச்சியில் இந்தியில் செய்திகள்.

### இந்தி படித்தால் தான் வேலை கிடைக்கும் என்ற வாதம் சரியா?

- இல்லை; இல்லவே இல்லை.
- இந்தி பேசும் மாநிலங்களைச் சார்ந்த பீகாரி களும், உ.பி.காரர்களும் தமிழ்நாட்டில்தான் வேலை நோக்கி படை எடுக்கிறார்கள். ஓட்டல்கள், துணிக் கடைகள், நகைக் கடைகள், கட்டிட வேலைகள் என்று தமிழ்நாட்டில் வணிக - தொழில் நிறுவனங்களில் இலட்சக்கணக்கில் இந்தி பேசும் இளைஞர்களும் வடகிழக்கு மாநிலத்தவருமே குவிகிறார்கள். இந்தி படித்தால் வேலை கிடைக்கும் என்றால் இந்தி பேசாத தமிழ் நாட்டுக்கு ஏன் அவர்கள் வேலை தேடி வருகிறார்கள் ?

### உயர் பதவிகளில் இந்திக்காரர்கள் ஆக்கிரமிப்பு

தமிழ்நாட்டில் தொடர்வண்டி டிக்கட் பரிசோதகர்கள், மத்திய அரசு நிறுவனங்களான வருமானவரி, சுங்கவரி, கலால் வரி துறைகள், கடவுச் சீட்டு வழங்கும் துறை, அஞ்சலகங்கள் கடந்த பல ஆண்டுகளாகவே இந்திக்காரர்கள் ஊழியர்களாகவும் அதிகாரிகளும் குவிக்கப்படுகிறார்கள். இதில் திட்டமிட்ட சதிகள் நடக்கின்றன. தமிழே பேசத் தெரியாத வடநாட்டுக்காரர்கள், தமிழ்த் தேர்வில் கூடுதல் மதிப்பெண் பெற்றவர்களாக அறிவிக்கப்பட்டு, தமிழ்நாட்டு அஞ்சலகங்களில் வேலையில் சேர்ந்த மோசடிகள் வெளிச்சத்துக்கு வந்தன. தமிழ்நாட்டு அதிகாரிகள், தமிழ் படித்தவர்கள் வேலை வாய்ப்புகளை பறி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதே நிலை தொடர்ந்தால் தமிழ்நாட்டில் மத்திய அரசு அலுவலகங்கள் மத்திய அரசின் பொதுத் துறை நிறுவனங்களில் நமது தமிழர்களை பார்க்கவே முடியாது. இந்திக்காரர்கள்தான் நிரம்பி வழிவார்கள். இந்தி தெரிந்தால் உள்ளே வா; இல்லாவிட்டால் வெளியே போ என்று நம்மையே தமிழ்நாட்டு மத்திய அரசு அலுவலகங்களிலிருந்து கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளப்போகும் காலம் வந்து விடும்.

தமிழர்களே நாம் என்ன செய்யப் போகிறோம் ?

கட்சியையும் ஜாதியையும் மதத்தையும் பேசிக் கொண்டே நமது உரிமைகளை இழந்து நிற்கப் போகிறோமா ?

இந்த விழிப்புணர்வை உங்களிடம் உருவாக்கிடவே இந்தப் பயணம்.

# விவசாயிகள் மரணிக்கிறார்கள்; கார்ப்பரேட்டுகள் கொழுக்கிறார்கள்

ஏன் இந்த பரப்புரைப் பயணம்?

கடந்த மூன்று ஆண்டுகளில் இந்தியா முழுதும் 2000 விவசாயிகள் கடன் தொல்லையில் சிக்கி தற்கொலை செய்து கொண்டுவிட்டார்கள். தமிழ்நாட்டில் மட்டும் 200 விவசாயிகள் தற்கொலை செய்து மடிந்து விட்டனர்.

பெரும் தொழில் நிறுவனங்கள் அரசு பொதுத் துறை வங்கிகளில் கடன் வாங்கி திருப்பி செலுத்தாமல் மோசடி செய்வதற்கு ‘வராக் கடன்கள்; செயல்படாத சொத்துக்கள்’ என்று பெயர்களைக் கண்டுபிடித்து வைத்திருக்கிறது பார்ப்பன அதிகாரவர்க்கம். கல்லூரி படிப்புக்கு கடன் வாங்கி திருப்பி செலுத்த முடியாத மாணவர்களின் படத்தை வங்கி விளம்பரப் பலகையில் ஒட்டி அவமானப்படுத்தும் பார்ப்பன வங்கி அதிகாரக் கும்பல், வாங்கிய கடனை திருப்பி செலுத்தாத பண முதலைகளின் பட்டியலை வெளியிட உச்சநீதிமன்றம் உத்தரவிட்டும் வெளியிட மறுக்கிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் மோடி ஆட்சிக்கு வந்த பிறகு வங்கிகளில் ‘பெரும் பணத் திமிங்கிலங்கள்’ கடனாக வாங்கி, பட்டை நாமம் போட்ட தொகை 3 மடங்கு அதிகரித்துள்ளது. 2.3 இலட்சம் கோடியிலிருந்து 6.8 இலட்சம் கோடியாக உயர்ந்திருக்கிறது. வங்கிகள் அளித்துள்ள மொத்த கடன்களின் மதிப்பில் இது 11 சதவீதம்.

வங்கிகளில் கடன் வாங்கி திருப்பி செலுத்தாமல், ‘செயல்படா சொத்துகளாக’ (அதாவது பார்ப்பன அதிகார வர்க்கத் துணையுடன் பட்டை நாமம் போடப்பட்ட தொகை) மாற்றியவர்களில் 70 சதவீதம் பேர் விரல்விட்டு எண்ணக்கூடிய கார்ப்பரேட் நிறுவனங்கள், இப்படிச் சொல்வது நாடாளுமன்றக் கணக்கு குழுவின் தலைவர் கே.வி. தாமஸ், அவரது அறிக்கை நாடாளுமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிறது.

இந்திய ரிசர்வ் வங்கிப் பார்ப்பனர்கள் இதற்காகவே திட்டங்களை உருவாக்கினர். வங்கிக் கடன் மறு நிதியம் மற்றும் மறு கட்டமைப்புத் திட்டம் (Loan refinancing and restructiring schemes) என்று அதற்கு பெயர் சூட்டினார்கள். கடன் வாங்கி திருப்பி செலுத்தாத கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு கடனை திருப்பி செலுத்த மீண்டும் கடன் வழங்குவதுதான் இத் திட்டம்.

கடன் வாங்கி, கடனை திருப்பிச் செலுத்த வங்கிகள் கொடுத்த கடனையும் வாங்கி, ஆக மொத்தமாக அதானி வங்கிகளுக்கு ஏப்பம் விட்டிருக்கும் தொகை ரூ.72,000 கோடி. இந்தப் பேர் வழிக்குச் சொந்தமான விமானத்தில் தான் மோடி உலகம் முழுதும் பறந்து கொண்டிருக்கிறார்.

வட்டி கட்டக்கூட முடியாத அளவுக்கு உற்பத்தி செய்யாத நிலையில் உள்ள அதானியின் இரண்டு மின் உற்பத்தி நிலையங்களுக்கு தாராளமாக கடன் தொகையை வாரி வழங்கியிருக்கிறார்கள். ஏற்கனவே வாங்கிய கடன், புதிய கடன் எல்லாவற்றையும் 10 ஆண்டுகள் கழித்து செலுத்தினால் போதும். அதுவரை வட்டியைக்கூட கட்ட வேண்டாம் என்று தாராளமாக சலுகை காட்டியிருக்கிறது மோடி ஆட்சி. இதற்கு அருண்ஜெட்லியும் உடந்தை.

அதானிக்கு மட்டுமல்ல; மோடிக்கு மிகவும் நெருக்கமான முகேஷ் அம்பானிக்கும் அவரது ரிலையன்ஸ் கேஸ் டிரான்ஸ்போர்ட் இன்ப்ராஸ்ட்ரக்சர் நிறுவனத்துக்கு பழைய கடனையும் சேர்த்து புதிதாக ரூ4500 கோடி கடனை வழங்கி, திருப்பி செலுத்தும் காலத்தை 10 ஆண்டுக்கு நீடித்திருக்கிறார்கள். வேதாந்தா நிறுவனத்துக்கும் இதே சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், வறட்சியின்

(3 ஆம் பக்கம்)

# சிறு குறுந் தொழில்களை நசுக்கி, மாநில உரிமைகளைப் பறிக்கும் ஜி.எஸ்.டி. வரி

'ஒற்றை ஆட்சி; ஒற்றைப் பண்பாடு' நோக்கி நாட்டை இழுத்துச் செல்லும் மத்திய பார்ப்பனிய ஆட்சி - நீட் வழியாக மாநில கல்வி உரிமையை பறித்ததுபோல், 'ஜி.எஸ்.டி.' வழியாக மாநிலங்களின் வரி விதிப்பு உரிமையையும் பறித்துவிட்டது.

இந்திய அரசியல் சட்டம் இந்தியாவின் மாநிலங்களின் உரிமைகளில் வரிவிதிப்பு உரிமையையும் வழங்கியிருக்கிறது. நாடு முழுதும் ஒரே வர்த்தக சந்தை - ஒரே வரி என்று கூறி மோடி மத்திய சரக்கு மற்றும் சேவை வரியை ஜூலை முதல் தேதி முதல் அமுல்படுத்திவிட்டார்.

அம்பானி, அதானி போன்ற பெரும் பணமுதலைகள் இதை ஆதரிக்கிறார்கள் என்பதிலிருந்தே இது யாருக்கு சாதகமானது என்பதை புரிந்து கொள்ளலாம். இந்த ஜி.எஸ்.டி. சிறிய நடுத்தர நிறுவனங்கள், வர்த்தகர்கள் சாமான்ய மக்கள் தலை மீது சுமையை ஏற்றியிருக்கிறது. ஜவுளி, பீடி, மருந்துத் தொழில்கள், கட்டுமானம், போக்குவரத்து, தையல், தீப்பெட்டித் தொழில்கள், சிறு தொழில்களை கடுமையாக பாதித்திருக்கிறது.

- 2010ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சி இத்திட்டத்தைக் கொண்டு வர முயன்றபோது அதை கடுமையாக எதிர்த்தது இதே பா.ஜ.கதான். இதற்காக 3 மசோதாக்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தபோது அதைத் திரும்பப் பெற வைத்தது பா.ஜ.க. குஜராத் முதல்வராக இருந்த மோடி, தனது மாநிலத்தில் ஜி.எஸ்டியை உயிரைக் கொடுத்தாவது தடுப்பேன் என்று வீரவசனம் பேசினார். அதே பா.ஜ.க. வரித் துறையில் புரட்சி செய்துவிட்டதுபோல் இப்போது தம்பட்டமடிக்கிறது.
- மாநிலங்களின் தனித்துவங்களை அழிக்கும் முயற்சிகளில் ஒன்றாகவே பா.ஜ.க. இப்போது இதை அமுல்படுத்தியிருக்கிறது.
- சிறு தொழில்களுக்கு 5 சதவீத சேவை வரியிலிருந்து ரூ.1.5 கோடி வரை விற்பனை செய்வோருக்கு விலக்கு தரப்பட்டிருந்தது. இப்போது இந்த இலக்கை 20 இலட்சமாக குறைத்து விட்டார்கள்.
- திருப்பூரில் பின்னலாடைத் தொழிலில் பெரும் நிறுவனங்களிடம் சிறு சிறு வேலைகளை 'ஜாப் ஆர்டர்' எடுத்து வேலை செய்து வந்த 7 இலட்சம் தொழிலாளர்கள் இப்போது வேலை இழக்கும் நிலை உருவாகியுள்ளது. காரணம் 'ஜாப் ஒர்க்' எடுத்து செய்யும் வேலைக்கு 18 சதவீத வரி விதித்து விட்டார்கள். ஜாப் ஒர்க் செய்வோருக்கு கூலியை உயர்த்தித் தர முடியாது என்று பெரும் நிறுவனங்கள் தாங்களாகவே அந்த வேலைகளை செய்து கொள்ள முடிவு செய்து விட்டன. இதனால் 'ஜாப் ஒர்க்கை' நம்பி திருப்பூர் வந்த ஏழை குடும்பங்கள் ஊரை விட்டே வெளியேறத் தொடங்கி விட்டன. பா.ஜ.க.வை தீவிரமாக ஆதரிக்கும் 'தினமணி' நாளேடே (ஜூலை 17) இந்த செய்தியை கட்டுரையாக வெளியிட்டுள்ளது.
- குடிசைத் தொழிலான கடலை மிட்டாய்க்கு 5 சதவீத வரி; ஆனால் பீசாவுக்கு வரி இல்லை.
- ஆயுர்வேத மருந்துகளுக்கு வரி போட்டு விட்டார்கள். கடும் காய்ச்சலுக்கு அரசு இலவசமாக வழங்கி வந்த 'நில வேம்பு கசாயம்' - இனி பாட்டிலில் அடைத்து 100 ரூபாய்க்கு விற்கப் போகிறார்கள் என்று கூறுகிறார் மருத்துவர் சிவராமன்.
- ஒரு கோடி ரூபாய்க்கு மேல் விற்கும் சொகுசுகார்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் வரி குறைப்பு.
- பெட்ரோலுக்கும் டீசலுக்கும் ஜி.எஸ்டியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுவிட்டது. அதன் இரகசியம் என்ன தெரியுமா? ஜி.எஸ்டி. வரி விதிப்புக்குள் பெட்ரோல், டீசலைக் கொண்டு வந்து விட்டால் விலை பாதியாகக் குறைந்து விடும். பெட்ரோலுக்கு 55 சதவீதமும் டீசலுக்கு 57 சதவீதமும் இப்போது வரி போடப்படுகிறது. இதை 18 சதவீதமாக குறைக்க மோடி அரசு தயாராக இல்லை. அதுதான் விலக்கு அளித்ததற்கான இரகசியம். வார இறுதி நாள்களில் குடும்பத்துடன் ஓட்டலுக்கு சென்று சாப்பிடுபவர்களுக்கு போடப்படும் 'பில்'லைப் பார்த்தாலே 'ஜி.எஸ்டி.'யின் சுமை புரியும்.

இப்படி ஏராளமாக சொல்ல முடியும்; உதாரணத்துக்காக மட்டும் சிலவற்றை சுட்டிக் காட்டினோம்.

இதைவிட மற்றொரு ஆபத்தும் இதில் இருப்பதை சுட்டிக்காட்ட வேண்டும்.

ஜி.எஸ்டி. கட்டமைப்பில் வரி செலுத்துவோர் - இந்த வரிவிதிப்பை அமுல்படுத்துவோர் அனைவருக்கும் தொழில்நுட்பக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகள் வழங்குவதற்காக 'ஜி.எஸ்டி.என்.' என்ற ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது அரசு நிறுவனம் அல்ல; தனியார் அமைப்பு என்பது தான் அதிர்ச்சிக்குரிய செய்தி. பொதுவாக 'ஸ்டேட் வங்கி' போன்ற அரசுத் துறை வங்கிகளிடம் தான் அரசு நிதி சார்ந்த பொறுப்புகளைக் கையாளும் உரிமைகள் வழங்கப்படும். இப்போது அதிகாரம் வழங்கப்பட்டுள்ள தனியார் அமைப்பில் அரசின் பங்கு 49 சதவீதம். ஆனால் அய்.சி.அய்.சி. வங்கி, ஹெச்.டி.எப்.சி. வங்கி உள்ளிட்ட தனியார் வங்கி மற்றும் அமைப்புகளின் முதலீடு 51 சதவீதம். அரசு முதலீட்டைவிட அதிகம். மத்திய மாநில அரசுகள் ஜி.எஸ்.டி. மூலம் வசூலிக்கும் வரியான பல இலட்சம் கோடி ரூபாய் நிதி நிர்வாகத்தை தனியார் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு இந்தியாவின் அனைத்துத் தொழில் நிறுவனங்களின் வர்த்தகம், வணிகம் சார்ந்த அத்தனை தகவல்களும் தனியார் நிறுவனத்துக்குக் கிடைத்து விட வாய்ப்புகளை உருவாக்கித் தந்துள்ளது மோடி ஆட்சி. தனியார் பிடியில் உள்ள இந்த 'ஜி.எஸ்.டி.என்.' நெட் ஒர்க்கிடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் யாரும் தகவல் கேட்டுப் பெற முடியாது. மத்திய அரசின் தலைமை கணக்கு அதிகாரியின் (சி.ஏ.ஜி.) கணக்கு தணிக்கையும் செய்ய முடியாது. இது தேசத்தின் நலனுக்கே ஆபத்து. இவ்வளவு அதிகாரங்களை ஒரு தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கலாமா என்று எதிர்ப்பு தெரிவிப்பது யார் தெரியுமா? பா.ஜ.க.வைச் சார்ந்த சுப்ரமணியசாமி, மாநிலங்களவையிலேயே சுப்பிரமணியசாமி இதை எதிர்த்துப் பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் டி.ராஜா உள்ளிட்டவர்கள் சுவாமியின் கருத்தை ஆதரித்துப் பேசியுள்ளனர். ('ஜூனியர் விகடன்' 26.7.2017 இதழ் இது பற்றி விரிவாக செய்தி வெளியிட்டுள்ளது)

அய்.சி.அய்.சி., எச்.டி.எப்.சி. உள்ளிட்ட தனியார் வங்கிகள், பார்ப்பன ஆதிக்கத்தில் புழுத்துக் கிடப்பவை. இந்தியாவின் அனைத்து வணிக தொழில் வர்த்தக நடவடிக்கைகள் அவை செலுத்தும் வரிகளை முறைப்படுத்தும் அதிகாரங்கள் அனைத்தும் பார்ப்பன ஆதிக்க அமைப்புக்கு தாரை வார்த்திருக்கும் தேச துரோகத்தை செய்திருக்கிறார் நிதி அமைச்சரான பார்ப்பனர் அருண் ஜெட்லி, மோடியின் 'ஆசீர்வாதத்தோடு' நடந்திருக்கிறது. இனி மாநில அரசு நிதிநிலை அறிக்கையில் நிதியமைச்சர் எந்தப் பொருளுக்கும் வரி விதிக்கும் அதிகாரம் இல்லை. 'ஜி.எஸ்டி.' வரியை மாற்றி அமைக்கும் அதிகாரம் 'ஜி.எஸ்டி.' கவுன்சில் என்ற அமைப்புக்குப் போய் விட்டது. இதில் சட்டமன்றமோ நாடாளுமன்றமோ தலையிட முடியாது. இந்த அமைப்பின் 'வீட்டோ' அதிகாரத்தை மோடி ஆட்சி தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டுவிட்டது. இதில் உறுப்பினராக இருக்கும் நிதியமைச்சர்கள் தலையாட்டி பொம்மைகள்தான்.

ஒரு மாநிலத்தின் அதிகார எல்லைக்கு உட்பட்ட வரிவிதிப்பைப் பிடுங்கி, பார்ப்பன தனியார் நிறுவனத்தின் கண்காணிப்புக்கு தாரை வார்த்து விட்டார்கள். தமிழகத்தின் தனித்துவம் பறிபோய் விட்டது.

இந்த ஆபத்துகளை தமிழர்களுக்கு உணர்த்தவே இந்தப் பயணம்.

# உணவு உரிமையைப் பறிக்கும் பார்ப்பனியம்

ஏன் இந்த பரப்புரைப் பயணம்?

மாட்டிறைச்சி விற்பனைக்கு தடை போடுகிறது பா.ஜ.க. ஆனால் மாட்டிறைச்சி ஏற்றுமதியில் இந்தியாதான் முதலிடம்.

- கடந்த 2016ஆம் ஆண்டு இந்தியா ஏற்றுமதி செய்த மாட்டிறைச்சி 1850 கிலோ மெட்ரிக் டன்.
- 2015-2016இல் இந்தியாவுக்கு மாட்டிறைச்சி மூலம் கிடைத்த வருமானம் ரூ. 28,802 கோடி.
- கடந்த ஆண்டு இந்தியாவும் பிரேசிலும் தலா 19.60 சதவீதம் தனித்தனியாக மாட்டிறைச்சி ஏற்றுமதி செய்து முதலிடத்தில் சரிசமமாக நிற்கின்றன. ஆனால் பிரேசில் நாட்டில் 'பசு தெய்வம்' என்ற கூப்பாடுகள் ஏதும் இல்லை.
- ஏழை எளிய மக்களுக்கு குறைந்த விலையில் கிடைக்கும் புரதச் சத்து மாட்டிறைச்சி.
- வேத கால பார்ப்பனர்கள் மாட்டிறைச்சியை விரும்பி சாப்பிட்டார்கள். 'இந்திரன்' என்ற கடவுளுக்குப் பிடித்த மாட்டிறைச்சியை பார்ப்பனர்கள் 'அக்னி' யாகத்தில் பலியிட்டதை ரிக்வேதம் கூறுகிறது.
- பலியிடப்பட வேண்டிய பசு உள்ளிட்ட மிருகங்களை எப்படி பலியிட வேண்டும்; எந்தப் பாகம் ருசியானது என்று 'தைதீனிய சம்கிதம்' என்ற சமஸ்கிருத புனித நூல் கூறுகிறது.
- தாய்மார்கள் கர்ப்பத்தில் வளரும் குழந்தை வேதத்தில் சிறந்து விளங்க வேண்டுமானால் நெய்யால் வறுத்த பசுவின் கறியை தாய்மார்கள் சாப்பிட வேண்டும் என்று வேதம் கூறுகிறது.
- இராமன் மாட்டிறைச்சி சாப்பிட்டான் என்று வால்மீகி இராமாயணம் கூறுகிறது. பரத்வாஜர் என்ற முனிவர் தனது ஆசிரமத்தில் பசுவின் கன்றை பலி கொடுத்து இராமனுக்கு விருந்து வைத்தார் என்றும் வால்மீகி இராமாயணம் கூறுகிறது.
- அமெரிக்காவில் விவேகானந்தர் பசு மாமிசத்தை விரும்பி உண்டார் என்று அவருடனிருந்த டாக்டர் பரோவ் தனது அனுபவக் குறிப்பில் பதிவு செய்கிறார்.
- இந்தியாவில் பஞ்சம் வந்தபோது பசு மாட்டைக் காப்பாற்ற விவேகானந்தரிடம் நன்கொடை கேட்டு வந்த பார்ப்பனர்களிடம் மக்கள் மடிந்ததைவிட மாடு செத்தது தான் உங்களுக்கு முக்கியமாகப் போய்விட்டதா ? என்று விவேகானந்தர் கேட்டார். 'பசு எங்கள் தாய்' என்று பார்ப்பனர்கள் கூற, 'உங்களைப் போன்றவர்களை பசுமாடுகள்தான் பெற்றெடுக்க முடியும்' என்று விவேகானந்தர் பதிலடி தந்தார். இராமகிருஷ்ண மடம் வெளியிட்டுள்ள நூலில் இப்பதிவு இடம் பெற்றுள்ளது.
- தோல் பெல்ட், தோல் செருப்பு, தோல் பை என்று தோல் பொருள்களை பயன்படுத்துவோர், அது மாட்டுத் தோலில் செய்யப்பட்டது அல்ல என்று உறுதியாகக் கூற முடியுமா ?

உணவு உரிமை தனி மனித உரிமை !

அதை மதத்தின் உரிமையாக்குவது மத பாசிசம் !

ஒடுக்கப்பட்ட மக்களின் உணவான மாட்டுக்கறியை சாப்பிடுவது குற்றம் என்று கூறிக் கொண்டே அந்த மக்களை 'இந்துக்கள்' என்று நாடகம் ஆடுவது இரட்டை வேடம் அல்லவா ?

சிந்திப்பீர் தமிழர்களே !

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோரப் பிடியில் சிக்கித் தவித்து, உயிருக்குப் போராடும் விவசாயிகள் செத்தாலும் பரவாயில்லை என்று கடனை தள்ளுபடி செய்ய அடாவடியாக மறுக்கிறது.

நமது விவசாயிகளின் மொத்தக் கடன் சுமார் ரூ.75,000 கோடி. ஆனால் அதானி என்ற ஒரே தொழில் நிறுவனத்துக்கு மட்டும் வாரி வழங்கிய கடன் ரூ.72,000 கோடி.

வங்கிகளின் சேமிப்புகளில் 60 சதவீதம் மக்களுக்கு சொந்தமானவை. 15 சதவீதம் அரசுத் துறை நிறுவனங்கள் அளித்தவை. மக்களின் சொத்துகள்தான் இப்படி கார்ப்பரேட்டுகளின் காலடியில் கொட்டப்படுகின்றன. இப்படி கடனில் மூழ்கும் வங்கிகளை மீட்க ரிசர்வ் வங்கியின் துணைத் தலைவரான வைரல் ஆச்சார்யா என்ற பார்ப்பனர் ஒரு யோசனையை முன் வைத்துள்ளார். அரசுத் துறை வங்கிகளை தனியாரிடம் ஒப்படைத்து விடலாம் என்கிறார். அதேபோல் கடனில் மூழ்கியுள்ள சிறிய வங்கிகளைக் காப்பாற்ற எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அவைகளை அப்படியே மூழ்கவிட்டு விடலாம் என்கிறார். அப்படியே வங்கிகளை தனியாருக்கு விற்றால் அப்போது அதை வாங்கப் போகிறவர்கள் யார் ? ஏற்கனவே வங்கிகளில் கடன் வாங்கி நாமம் போட்ட கார்ப்பரேட்டுகள் தான் வாங்குவார்கள்.

வங்கிகளை தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் பார்ப்பன அதிகார வர்க்கம், விவசாயிகளின் வயிற்றில் அடித்து பெரும் பண முதலைகளை கொழுக்க வைத்து நாட்டையே திவாலாக்குகிறது. மோடி ஆட்சி இதையே கொள்கையாகவும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இவர்கள் கொண்டாடும் 'இந்துக்கள்' ஒட்டாண்டிகளாகிறார்கள்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கதிராமங்கலத்தில் ஓ.என்.ஜி.சி.யின் மக்கள் விரோதத் திமிர் நடவடிக்கை

தமிழ்நாட்டின் கனிமவளங்கள் மிக மோசமாக சுரண்டப்பட்டு வருகின்றன. இதற்கு இந்திய நிறுவனங்களும் பன்னாட்டு நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு செயல்படுகின்றன. குறிப்பாக காவிரி பாசனப் பகுதி, பாலாற்றுப் பகுதிகள் குறிவைக்கப்படுகிறது. இந்தப் பகுதிகளில் 500 அடி ஆழத்தில் நிலக்கரி பெருமளவில் இருக்கிறது. அதன் இடுக்குகளில் மீதேன் எரிவாயு இருக்கிறது. இந்த எரிவாயுவை எடுக்க 'கிரேட் ஈஸ்ட்டர்ன் எனர்ஜி கார்ப்பரேஷன்' என்ற தனியார் நிறுவனத்துக்கு 2010ஆம் ஆண்டு அனுமதி அளித்தது இந்திய அரசு. 32 ஆண்டுகள் மீத்தேன் எடுப்பதும் 100 ஆண்டுகள் நிலக்கரி எடுப்பதும் திட்டம். இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் காவிரி, பாசனப் பகுதி நிச்சயமாக பாலைவன மாகிவிடும்.

பூமியின் சராசரி வெப்ப நிலையை கடுமையாக உயர்த்துவது மீத்தேன் வாயு. இதை எடுக்கும் முறைக்கு 'நீரியல் விரிசல்' என்று பெயர். பூமிக்கடியில் இருக்கும் பாறைகளை உடைத்து நொறுக்கி 'மீத்தேன்' எடுக்க வேண்டும். இப்படி நொறுக்குவதற்கு இரசாயனக் கலவைகளை பூமிக்குள் செலுத்துகிறார்கள். இந்தத் தொழில் நுட்பம்தான் 'நீரியல் விரிசல்'. இதனால் நிலத்தடி நீர் கடும் பாதிப்புக்குள்ளாகியதால் 1947ஆம் ஆண்டிலேயே அமெரிக்கா போன்ற நாடுகளில் இத் திட்டங்கள் கைவிடப்பட்டன என்பது மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

இத்திட்டம் கைவிடப்பட்ட பிறகு 'ஆமாம் மீத்தேன் எடுப்பது ஆபத்து தான்' என்று கூறுகிறது இந்திய இயற்கை எரிவாயுக் கழகமான ஓ.என்.ஜி.சி. (O.N.G.C.) நிறுவனம்.

இதேபோல் புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் கிராமத்தில் பூமியைப் பாழடித்து 'ஹைடிரோ கார்பன்' எடுத்தார்கள். ஓ.என்.ஜி.சி. நிறுவனம், மக்கள் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் சுரண்டலைத் தொடர்ந்தது; மக்கள் மீது அடக்குமுறை ஏவப்பட்டது; போராட்டம் தொடர்ந்தது; இறுதியாக மக்கள் சக்திக்கு அரசு பணிந்தது.

இப்போது அதே காவிரி பாசனப் பகுதி 'கதிரா மங்கலத்தில்' பூமியைத் தோண்டி எரிவாயு எடுத்து வரும் ஓ.என்.ஜி.சி.யை எதிர்த்து மக்கள் 20 நாள்களுக்கும் மேலாக தொடர் போராட்டம் நடத்துகிறார்கள். சுரண்டலை தட்டிக் கேட்ட பேராசிரியர் ஜெயராமன் உள்ளிட்ட 10 செயல்பாட்டாளர்கள் பிணையில் வெளிவராத பிரிவுகளில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

கதிரா மங்கலத்தில் என்ன நடக்கிறது ?

- 30 ஆண்டுகளாக ஓ.என்.ஜி.சி. நிறுவனம் காவிரியின் கடைமடைப் பகுதியான கதிராமங்கலத்தில் எரிபொருளை பூமியிலிருந்து உறிஞ்சும் வேலையை செய்கிறது. இதற்காக விவசாய நிலங்களுக்கு அடியில் குழாய்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. நிலவளம், நீர்வளம் கடுமையாக பாதித்துவிட்டது. குடிநீரும் சுற்றுச் சூழலும் மாசுபட்டு விட்டன.

'ஓ.என்.ஜி.சி.' முழுக்க முழுக்க பார்ப்பனர்கள், மேல் தட்டு வர்க்கத்தினரைக் கொண்ட ஒரு அமைப்பு. அவர்கள் ஒரு கிராமத்தில் நிறை வேற்றப் போகும் திட்டங்கள் குறித்து கிராம மக்களிடம் கலந்து பேசுவதே இல்லை.

- பொதுத் துறை நிறுவனங்களிலேயே இரண்டாவது பெரிய நிறுவனம் 'ஓ.என்.ஜி.சி.'. மிகவும் இலாபம் ஈட்டக்கூடிய நிறுவனம் 1958இல் தொடங்கப்பட்டு இந்தியாவில் 28 இடங்களில் செயல்படுகிறது.
- கதிராமங்கலம் கிராம மக்கள் 30 ஆண்டுகளுக்குப் பிறகு பாதிப்புகளை உணர்ந்து, 'ஓ.என்.ஜி.சி.' கிராமத்தை விட்டே வெளியேற வேண்டும்; எங்கள் வாழ்க்கையுடன் இனியும் விளையாடாதே என்று போர்க்கொடி உயர்த்திவிட்டார்கள். ஆனால், மக்கள் எதிர்ப்பைப் பற்றி இந்தப் பார்ப்பன மேல்தட்டு வர்க்க நிறுவனத்துக்கு எந்த கவலையும் இல்லாமல் அதிகாரத் திமிருடன் செயல்படுகிறது. எப்படி ?

இதோ, சில முக்கிய தகவல்கள்:

- எந்த ஒரு திட்டத்தையும் தொடங்கும் போது மக்களிடம் கருத்துகளைக் கேட்க வேண்டும். பொதுக் கருத்துக் கணிப்பு நடத்திய பிறகே திட்டம் குறித்து முடிவெடுக்க வேண்டும் என்பதும் அரசின் நடைமுறை விதி. இந்தக் கருத்துக் கணிப்பின் அடிப் படையிலேயே மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் பரிந்துரை செய்ய வேண்டும். மக்கள் எதிர்ப்பு இருந்தால் மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியம் அவ்வளவு எளிதாக ஒப்புதல் வழங்காது.
- இந்த நிலையில் கடந்த 2015ஆம் ஆண்டில் காவிரிப் படுகையில் 35 சோதனைக் கிணறுகளில் எரிவாயு எடுக்க 'ஓ.என்.ஜி.சி.' திட்டமிட்டது. இவற்றில் 14 கடலூர் மாவட்டத்திலும், 9 நாகை மாவட்டத்திலும், 6 அரியலூர் மாவட்டத்திலும், 5 தஞ்சாவூரிலும் அமைக்க திட்டமிடப் பட்டது. கடலூர் தவிர, ஏனைய மாவட்டங்களில் மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அதனால் மாநில அரசின் மாசுக் கட்டுப்பாடு வாரியம் பரிந்துரை வழங்க தயங்கியது.
- 'ஓ.என்.ஜி.சி.' என்ன செய்தது தெரியுமா ? 'மக்கள் கருத்தைத் தூக்கிக் குப்பையில் போடு; இந்த கிராமத்து ஆட்களிடம் எதற்காக கருத்து கேட்க வேண்டும் ? கருத்துக் கேட்பே தேவையில்லை; தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதலும் தேவை இல்லை' என்று பிரச்சினையை மத்திய சுற்றுச் சூழல் அமைச்கத் திடம் கொண்டு போனது. டெல்லியில் அதிகாரமய்யம் 'அவாள்'களிடம் தானே ! - சுற்றுச் சூழல் அமைச்சகம். 'ஓ.என்.ஜி.சி.' கருத்தை அப்படியே ஏற்றுக் கொண்டது.

அதற்குப் பிறகு கடந்த 2017 பிப்ரவரி 15ஆம் தேதி மோடி தலைமையில் "பொருளாதாரப் பிரச்சினை களுக்கான அமைச்சரவைக் குழு" (Cabinet Committee on Economic Affairs) கூடி 31 இடங்களில் இயற்கை எரிவாயு, எண்ணெய், ஹைடிரோ கார்பன் வளங்களைத் தோண்டி எடுப்பதற்கான அனுமதியை வழங்கிவிட்டது.

அது மட்டுமல்ல, காவிரி பாசனப் பகுதியில் மேலும் 110 சோதனைக் கிணறுகளைத் தோண்டவும், சுற்றுச் சூழல் வனத்துறை அமைச்சகத்திடம் இந்த 'ஓ.என்.ஜி.சி.' அனுமதி கோரியிருக்கிறது.

- இன்னொரு செய்தியும் இருக்கிறது. 'ஹைடிரோ கார்பன்' திட்டம் நெடுவாசலில் நிறுத்தப்பட்டாலும், ஏனைய பகுதிகளில் 'ஓ.என்.ஜி.சி.' எரிவாயுவுடன் ஹைடிரோ கார்பன் எடுக்கும் வேலைகளையும் செய்து கொண்டிருக்கிறது. மோடி ஆட்சி, "அனைத்து வகையான ஹைடிரோ கார்பன்களையும் எடுக்கலாம்; இதற்கு ஒரே உரிமம் வாங்கினால் போதும் (Single License)" என்ற முடிவை கொண்டு வந்துள்ளது. இதனால் ஒரு கிராமத்தில் 'ஹைடிரோ கார்பன் எடுக்கலாம்' என்ற ஒற்றை உரிமத்தை வைத்துக் கொண்டு, தனியார் நிறுவனங்களும் உள்ளூர் மக்களிடம் எந்த அனுமதியையும் பெறாமல் 'ஹைடிரோ கார்பனை' உறிஞ்சி பூமி வளத்தை மலடாக்கி வருகின்றன.
- விளைநிலங்கள் வழியே குழாய் பதித்து எடுத்துச் செல்லும்போது உடைப்பு, விபத்து நேரும்போது மக்கள் போராடுகிறார்கள். இப்போது அந்த நிறுவனம் 'டேங்கர்களில்' ஆயில் எடுத்துச் செல்வதில்லை. இரவு நேரங்களில் இரகசியமாக இயக்கப்படும் டேங்கர்கள், எண்ணெய் கழிவுகளை வெள்ளக்குடி, கமலாபுரம் பகுதியில் சட்டவிரோதமாக இருப்பு வைக்கப்படுவதாக மக்கள் குற்றம் சாட்டுவதாக, உண்மை கண்டறியும் குழுவின் அறிக்கை கூறுகிறது.

'கதிராமங்கலம்' ஒரு காலத்தில் நமது சோழ மன்னர்களால் பார்ப்பனர்களுக்கு தானம் வழங்கப்பட்ட பகுதி. அது பார்ப்பன மங்கலமாகவே இருந்திருக்குமானால் இத்தகைய மக்களை சீரழிக்கும் திட்டங்களைக் கொண்டு வந்திருப்பார்களா ? நிச்சயமாகக் கொண்டு வந்திருக்க மாட்டார்கள். வேத பாடசாலைகள்தான் பெருகியிருக்கும்.

இந்த ஆபத்துகளை நமது மக்களிடம் எடுத்துச் சொல்லி, தமிழ்நாட்டின் தனித்துவத்தைச் சுட்டிக் காட்டுவதற்கே உங்களிடம் வந்திருக்கிறோம். சிந்தியுங்கள்; விழித்துக் கொள்ளுங்கள் !

> "பூமியை நல்லபடி வைத்திருங்கள்; இது உங்கள் பெற்றோர் உங்களுக்கு அளித்ததல்ல; இது உங்கள் குழந்தைகள் உங்களுக்கு கடனாக அளித்தது. நமது முன்னோர்களிடமிருந்து இந்த பூமியை நாம் வாரிசுரிமையாகப் பெற்றுவிட வில்லை. மாறாக நம் குழந்தைகளிடமிருந்துஇப்பூமியை கடனாகப் பெற்றுள்ளோம்."

- செவ்விந்தியர் என்ற பழங்குடியினர் சொல் வழக்கு.

**தகவல்களுக்கு உதவி : பேராசிரியர் ஜெயராமன் எழுதிய 'மீத்தேன் அகதிகள்' நூல் மற்றும் 'உண்மை ஆராயும் குழு அறிக்கை'**

**ஏன் இந்த பரப்புரைப் பயணம்?**

(முதல் பக்கத் தொடர்ச்சி)

எங்கள் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சேர்க்கையை நாங்களே நடத்திக் கொள்ள வேண்டும். டெல்லி ஆட்சி திணிக்கும் நீட் தேர்வு வேண்டாம்; இதனால் மாநிலப் பாடத் திட்டத்தில் படித்து வரும் எங்கள் நாட்டு மாணவர்கள் இடங்களைப் பெற முடியவில்லை.

இப்போது நீட் தேர்வில் வெளிநாடுகளில் வாழும் பார்ப்பன உயர்ஜாதி மற்றும் தொழிலதிபர் வீட்டுப் பிள்ளைகள், வெளி நாட்டுக்காரர்களாக குடியுரிமைப் பெற்றுக் கொண்டு சொகுசு வாழ்க்கை வாழும் இந்தியர்கள். (இவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்கள்) இந்தியாவிலேயே பிறக்காத வெளிநாட்டுக்காரர்கள் அனைவருமே நீட் தேர்வு எழுதி, மருத்துவக் கல்லூரிகளில் இடம் பிடிக்க வழி திறந்து விட்டார்கள். நீட் தேர்வை உலகத் தேர்வாக்கிவிட்டோம் என்கிறது, மோடி ஆட்சி! என்னடா கொடுமை!

அரியலூரிலிருந்து மருத்துவம் படிக்க வரும் மாணவர்கள் அமெரிக்காவிலிருந்து வரும் மாணவர்களோடும், ஆடுதுறையிலிருந்து மருத்துவம் படிக்கவரும் நமது ஒடுக்கப்பட்ட சமுதாயத்துப் பெண், ஆஸ்திரேலியாவிலிருந்து விமானத்தில் வந்து இறங்கி நீட் தேர்வு எழுத வரும் மாணவர்களோடும் போட்டியிட்டு தேர்வு எழுதி வெற்றி பெற வேண்டும் என்பது எந்த ஊர் நியாயம்?

எம்.பி.பி.எஸ். படித்துவிட்டு கிராமங்களில் 3 ஆண்டு பணியாற்றினால் உயர் பட்டப் படிப்பில் 50 சதவீதம் இடஒதுக்கீடு என்ற முறையை நாம் பின்பற்றுகிறோம். இதனால் நமது கிராம சுகாதார மய்யங்களில் மருத்துவர்கள் பணியாற்ற வந்தார்கள். அரசு மருத்துவக் கல்லூரிகளில்தான் இவர்கள் பணியாற்ற வேண்டும் என்ற விதிமுறை இருந்ததால் தமிழ்நாட்டு அரசு மருத்துவமனைகளில் உயர் கல்வி பெற்ற அனுபவம் வாய்ந்த மருத்துவர்கள் கிடைத்தார்கள். 'நீட்' தேர்வு வழியாக மோடி ஆட்சி இந்த ஒதுக்கீடுகளையும் ஒழித்து விட்டதால், நமது கிராமப்புற சுகாதார மய்யங்களில் பணியாற்ற மருத்துவர்களே வரமாட்டார்கள். அரசு மருத்துவமனைகளிலும் உயர் மருத்துப் படிப்பு படித்த மருத்துவர்கள் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து விடும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. இனி தனியார் மருத்துவமனையை நோக்கிச் செல்ல வேண்டிய கட்டாயம் வரும். பல இலட்சம் ரூபாயை ஏழை எளிய மக்கள் இந்த தனியார் மருத்துவமனைகளுக்கு கொட்டி அழ முடியுமா?

ஆக, நீட் தேர்வு மருத்துவ படிப்பை மட்டும் பாதிக்கவில்லை; நமது மருத்துவ சேவையையும் பாதிக்கிறது. நீதிக்கட்சி ஆட்சியில் தொடங்கி பெரியார், காமராசர், அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர். என்ற நீண்ட பாரம்பரியத்தில் நாம் கட்டிக் காத்த சமூக நீதிகளை பறிக்கிறது, மத்திய மோடி ஆட்சி. இதனால் பாதிக்கப்படுவது அனைத்து ஒடுக்கப்பட்ட பிரிவு மக்களும், அனைத்து மதங்களிலும் உள்ள ஒடுக்கப்பட்ட மாணவர்களும்தான். இந்த உரிமைகளுக்கு ஒன்றுபட்டு நாம் குரல் கொடுக்காமல் மதத்தைக் காட்டி, ஜாதியைக் காட்டி சண்டை போட்டுக் கொண்டிருக்கலாமா? நாமெல்லாம் உணர்வுள்ள சமூகநீதிக்கான புரட்சிகர தமிழர்களாய் மாற வேண்டாமா? இதை எடுத்துச் சொல்லவே இந்தப் பயணம்.

## பரப்புரைப் பயணம்: பேச்சாளர்களுக்கு

கழகத்தின் பரப்புரைப் பயணங்களில் உரையாற்றும் தோழர்களுக்கு உதவிடும் வகையில் செய்திகள் – இந்த இதழில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. தோழர்கள் உரிய வகையில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

– ஆசிரியர்

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 3rd August 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN